## ஃபெஞ்சல் புயல்: கனமழை, வெள்ளம்!

# திருவண்ணாமலை, கடலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில்

# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு!




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (02.12.2024) திருவண்ணாமலை மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் கனமழையினால் ஏற்பட்ட நிலச்சரிவின் காரணமாக பாதிக்கப்பட்ட வ.உ.சி. நகரில் புதையுண்டவர்களின் சடலங்கள் மீட்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதை பார்வையிட்டார். உடன் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, சிறப்பு கண்காணிப்பு அலுவலர் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழும உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் கோ–ஆப்டெக்ஸ், மேலாண்மை இயக்குனர் தீபக் ஜேக்கப், மாவட்ட ஆட்சித் தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (02.12.2024) திருவண்ணாமலை மாவட்டம், மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கனமழையினால் ஏற்பட்ட நிலச்சரிவின் காரணமாக வ.உ.சி. நகரில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். உடன் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, சிறப்பு கண்காணிப்பு அலுவலர் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழும உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் கோ–ஆப்டெக்ஸ், மேலாண்மை இயக்குனர் தீபக் ஜேக்கப், மாவட்ட ஆட்சித் தலைவர் தெ.பாஸ்கர பாண்டியன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர் மு.பெ.கிரி மற்றும் பலர் உள்ளனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.12.2024) கடலூர் மாவட்டம் மேல்பட்டாம்பாக்கம் தற்காலிக நிவாரண முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள ஃபெஞ்சல் புயல் மழை காரணமாக தென்பெண்ணை ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட அண்ணாகிராமம் ஒன்றியத்துக்கு உட்பட்ட கீழ்கவரப்பட்டு, கோழிப்பாக்கம், சின்ன பகண்டை, கொங்கராயநல்லூர் ஆகிய கரையோர ஊராட்சிகள் மற்றும் மேல்பட்டாம் பேரூராட்சியைச் சேர்ந்த பொதுமக்களுக்கு அரிசி, மளிகை, பெட்ஷீட், புடவை உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை வழங்கினார். அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சி.வெ.கணேசன், சபா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ., ஊரக வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன் தீப் சிங் பேடி, மாவட்ட கண்காணிப்பு அலுவலர் ராமன், மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் உள்பட பலர் உடனிருந்தனர்.



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.12.2024) கடலூர் மாவட்டம் மேல்பட்டாம்பாக்கம் தற்காலிக நிவாரண முகாமில் தங்கவைக்கப் பட்டுள்ள ஃபெஞ்சல் புயல் மழை காரணமாக தென்பெண்ணை ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட அண்ணாகிராமம் ஒன்றியத்துக்கு உட்பட்ட கீழ்கவரப்பட்டு, கோழிப்பாக்கம் சின்ன பகண்டை, கொங்கராயநல்லூர் ஆகிய கரையோர ஊராட்சிகள் மற்றும் மேல்பட்டாம்பாக்கம் பேரூராட்சியைச் சேர்ந்த பொதுமக்களுக்கு அரிசி, மளிகை, பெட்ஷீட், புடவை உள்ளிட்ட நிவாரணப் பொருட்கள் மற்றும் மதிய உணவு வழங்கினார். அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சி.வெ.கணேசன், சபா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ., ஊரக வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன் தீப் சிங் பேடி, மாவட்ட கண்காணிப்பு அலுவலர் ராமன் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.12.2024) கடலூர் மாவட்டத்தில் ஃபெஞ்சல் புயல் மழை காரணமாக, மேல்பட்டாம்பாக்கம் நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு மேற்கொள்ளப்படும் மருத்துவ பரிசோதனைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். உடன் அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சி.வெ.கணேசன், சபா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ., ஊரக வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன் தீப் சிங் பேடி, மாவட்ட கண்காணிப்பு அலுவலர் சி.அ.ராமன், மாவட்ட ஆட்சித் தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் மற்றும் பலர் உள்ளனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.12.2024) ஃபெஞ்சல் புயல் மழை காரணமாக தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், தின்னஹள்ளி ஊராட்சி, வேப்பமரத்தூர், வே.கொம்மத்தம்பட்டியில் இணைப்புச் சாலை துண்டிக்கப்பட்டதால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார். இந்த ஆய்வில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், மாவட்டச் செயலாளர்கள் தடங்கம் சுப்பிரமணி, பெ.பழனியப்பன், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் ச.திவ்யதர்சினி, மாவட்ட ஆட்சித்தலைவர் கி.சாந்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை, போச்சம்பள்ளி பகுதிகளில் புயல் மழை வெள்ளம் காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து ஆய்வு செய்தும் பாதிக்கப்பட்ட மக்களை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆறுதல் கூறி நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் அமைச்சர் சு.முத்துசாமி, மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ., ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ., கிருஷ்ணகிரி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் சில்பா பிரபாகர், மாவட்ட ஆட்சித் தலைவர் சரயு, இ.ஜி.சுகவனம், பி.முருகன், நரசிம்மன், நாகராஜ், மருத்துவர் மாலதி நாராயணசாமி, சாவித்திரி கடலரசு மூர்த்தி, சந்திரன், கதிரவன், உஷா ராணி குமரேசன், குமரேசன், ரஜினி செல்வம், எக்கூர் செல்வம், குண. வசந்தரசு, சாந்தமூர்த்தி, அறிஞர், ராஜேந்திரன், தீபக், அமானுல்லா மற்றும் பலர் உள்ளனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2.12.2024) தருமபுரி மாவட்டம், அரூர், காமாட்சியம்மன் திருமண மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள ஃபெஞ்சல் புயலால் வாணியாற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட 250க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு அரிசி உள்ளிட்ட மளிகைப் பொருட்கள், போர்வை உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை வழங்கினார். இந்த நிகழ்வில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், மாவட்டச் செயலாளர்கள் தடங்கம் சுப்பிரமணி, பெ.பழனியப்பன், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் ச. திவ்யதர்சினி, மாவட்ட ஆட்சித்தலைவர் கி. சாந்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.